# இன்றைய இறைவார்த்தை

# 16-07-2015

**ஆண்டின் பொதுக்காலம் 15ஆம் வாரம் – வியாழன்**
**முதல் ஆண்டு**

**முதல் வாசகம்:**

"இருக்கின்றவர் நானே" என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார்.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 3 : 13 – 20**

அந்நாள்களில் மோசே கடவுளிடம், "இதோ! இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, "அவர் பெயர் என்ன?" என்று அவர்கள் என்னை வினவினால், அவர்களுக்கு என்ன சொல்வேன்?" என்று கேட்டார். கடவுள் மோசேயை நோக்கி, "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என்றார். மேலும் அவர், "நீ இஸ்ரயேல் மக்களிடம், "இருக்கின்றவர் நானே" என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்" என்றார். கடவுள் மீண்டும் மோசேயை நோக்கிப் பின்வருமாறு கூறினார்: "நீ இஸ்ரயேல் மக்களிடம், "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள், என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்" என்று சொல். இதுவே என்றென்றும் என் பெயர் தலைமுறை தலைமுறையாக என் நினைவுச் சின்னமும் இதுவே! போ. இஸ்ரயேலின் பெரியோர்களை ஒன்று திரட்டி அவர்களை நோக்கி, "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள், எனக்குக் காட்சியளித்து இவ்வாறு கூறினார்: உங்களையும், எகிப்தில் உங்களுக்கு நேரிட்டதையும் நான் கண்ணாலே கண்டுகொண்டேன். எகிப்தின் கொடுமையிலிருந்து கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு, பாலும், தேனும் பொழியும் நாட்டிற்கு, உங்களை நடத்திச் செல்வேன்" என்று அறிவிப்பாய். அவர்கள் நீ சொல்வதைக் கேட்பர். நீயும் இஸ்ரயேலின் பெரியோர்களும் எகிப்திய மன்னனிடம் செல்லுங்கள். அவனை நோக்கி, "எபிரேயரின் கடவுளாகிய ஆண்டவர் எங்களைச் சந்தித்தார். இப்போதே நாங்கள் பாலை நிலத்தில் மூன்று நாள் வழிப்பயணம் போக இசைவு தாரும். ஏனெனில், எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலிசெலுத்த வேண்டும்" என்று சொல்லுங்கள். என் கைவன்மையைக் கண்டாலன்றி, எகிப்திய மன்னன் உங்களைப் போக விடமாட்டான் என்பது எனக்குத் தெரியும். எனவே என் கையை ஓங்குவேன். நான் செய்யப் போகும் அனைத்து அருஞ்செயல்களாலும் எகிப்தியனைத் தண்டிப்பேன். அதற்குப் பின் அவன் உங்களை அனுப்பி விடுவான்."

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 105 : 1, 5, 8 – 9, 24 – 25, 26 – 27**

**பல்லவி: ஆண்டவர் தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கின்றார்.**

1. ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள். அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவுகூருங்கள்! அவர்தம் அருஞ்செயல்களையும், அவரது வாய் மொழிந்த நீதித் தீர்ப்புகளையும் நினைவில் கொள்ளுங்கள். பல்லவி
2. அவர் தமது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கின்றார். ஆயிரம் தலைமுறைக்கென தாம் அளித்த வாக்குறுதியை நினைவு கூர்கின்றார். ஆபிரகாமுடன் தாம் செய்துகொண்ட உடன்படிக்கையையும், ஈசாக்குக்குத் தாம் ஆணையிட்டுக் கூறியதையும் அவர் நினைவில் கொண்டுள்ளார். பல்லவி
3. ஆண்டவர் தம் மக்களைப் பல்கிப் பெருகச் செய்தார். அவர்களின் எதிரிகளை விட அவர்களை வலிமைமிக்கவர்கள் ஆக்கினார். தம் மக்களை வெறுக்கும் படியும், தம் அடியார்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யும் படியும் அவர் எகிப்தியரின் மனத்தை மாற்றினார். பல்லவி
4. அவர் தம் ஊழியராகிய மோசேயையும், தாம் தேர்ந்தெடுத்த ஆரோனையும் அனுப்பினார். அவர்கள் எகிப்தியரிடையே அவர்தம் அருஞ்செயல்களைச் செய்தனர். காம் நாட்டில் வியத்தகு செயல்களைச் செய்து காட்டினர். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:** (மத்தேயு: **11:28)**

அல்லேலூயா, அல்லேலூயா!

“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்.

நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்,” என்கிறார் ஆண்டவர்.

அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்.

**✠ தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 11 : 28 – 30**

அக்காலத்தில் இயேசு கூறியது: “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும்

உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது'' என்றார்.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

சும்மா தெருவில் உள்ள சுமையை இழுத்து தன் தலை மேல் வைத்துக் கொண்டு, நொந்து நொடிந்து, அறுந்த பட்டமாக அல்லாடுகிறான் மனிதன். அறிவியல் பொருட்கள், நுகர்வு கலாச்சாரம், பொழுதுபோக்கு அம்சங்கள், கலாச்சார சீரழிவு, ஆன்மீக வெற்றிடம் என்னும் பெருஞ்சுமைகளைச் சுமந்து சுமந்து சோர்ந்து போயுள்ளான். இளைப்பாறுதல் தேடி எங்கெங்கோ அலைந்து அதிலும் சோர்ந்து போயுள்ளான். பணம் கொடுத்து வாங்கும் முயற்சியில் பலர். மதுவில். மாதுவில் தேடும் ஒரு கூட்டம். போதை, சினிமா, ஊடகம் இவற்றில் தேடும் இன்னொரு கூட்டம். அந்த இடம், இந்த ஆள் என்று அலைமோதும் பிறிதொரு கூட்டம். ஆனாலும் இளைப்பாறுதல் கண்டடைந்தார் யாருமில்லை.

“என்னிடம் வாருங்கள், இளைப்பாறுதல் தருவேன்.'' உன் பெருஞ்சமையை என் தோள் மேல் இறக்கி வை. அவற்றை நான் உனக்காக சுமக்கிறேன். உன் குற்றங்களுக்காக நான் தண்டனை அனுபவிக்கிறேன். உன் தவறுகளுக்காக நான் தண்டனை பெறத் தயாராகயிருக்கிறேன். உனக்கு சுகம் கிடைக்க நான் காயப்பட காத்திருக்கிறேன். நமது பெருஞ்சுமையை ஆண்டவர் மேல் போட்டுவிட்டு சும்மா அலைவதல்ல சுகம். அது சோம்பலுக்கும், சோதனைக்கும் அதனால் அழிவுக்கும் ஆதாரமாகிவிடும். எனவே, “என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளுங்கள். அது அழுத்தாது, எளிதானது, இளைப்பாறுதல் தருவது'' என்று ஒரு மாற்றுச்சுமையை நமக்குத் தருகிறார். “இயேசுவே, நீர் தரும் சுமையைச் சுமந்து உம்மோடு நடந்து என் வாழ்வில் மகிழுவேன்'' என்று மன்றாடி இளைப்பாறுதல் அடைவோம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********